**முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

**10.04.2026**

OS. No. 257/2010

பக்கம் – 5

DW2 – ரமேஷ்பாபு

**2ம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

இரண்டாம் பிரதிவாதி என்னுடைய மூத்த சகோதரர் ஆவார். 01.05.1975 முதல் 30.09.1992 வரை என்னுடைய குடும்பத்திற்கு நான் பணரீதியாக உதவி செய்து வந்துள்ளேன். அதனை நிரூபிக்கும் வகையில் அதற்குரிய ஆவணங்களை எனது தரப்பில் நான் குறியீடு செய்துள்ளேன். நான் பி.டெக் படிப்பு படித்துள்ளேன். மெட்ராஸ் யூனிவர்சிட்டியில் அந்த படிப்பை நான் படித்தேன். என்னுடைய இளங்கலை படிப்பினை நானாகத்தான் படித்தேன் என்னை யாரும் படிக்க வைக்கவில்லை. நான் இளங்கலை படித்த காலகட்டத்தில் என்னுடைய தந்தையிடமும் என்னுடைய குடும்பத்தினரும் சரியான வசதி இல்லை என்றும் என்னுடைய மூத்த சகோதரர் ஹரிநாத் தான் என்னை படிக்க வைத்தார் என்றால் தவறாகும். என்னுடைய இளங்கலை படிப்பிற்கு கல்லூரி கட்டணத்தை என்னுடைய தந்தை தான் செலுத்தி வந்தார். கல்லூரி கட்டணத்தை செலுத்தியதற்கான ரசீதுகளை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய தந்தை 1992 ஆம் ஆண்டு காலமானார்.

(வாதி மற்றும் பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க சுமூகமான முறையில் வழக்கை முடிக்க சமரச தீர்வு மையத்திற்கு அனுப்ப கேட்டு மெமோ தாக்கல் செய்ததின் அடிப்டையில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.